Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNPSC
# Executive Officer

## Previous Year Paper
### Grade 3 (21 Feb 2019)
### Hindu Religion

Teachingninja.in

Sl. No. :

# EO3HR

பதிவு எண் | | | | | | | | |

**2019**

# இந்துமதம், சைவமும் வைணவமும்

## [பட்டப்படிப்பு தரம்]

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு 200 வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   (A) ● (C) (D)
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
12. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEAL

Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

1. கல்லால் செய்யப்படும் லிங்கத்திற்கு பெயர் என்ன?

(A) சைலஜம்
(B) இரத்னஜம்
(C) லோகஜம்
(D) க்ஷணிகம்

2. ஞானத்தைக் காட்டும் அடையாள முத்திரை

(A) சின் முத்திரை
(B) சின்மய முத்திரை
(C) ஆதி முத்திரை
(D) லிங்க முத்திரை

3. 'ஆலயம்' என்பதை ஆ + லயம் என பிரிப்பர் இதில் 'ஆ' என்பதன் பொருள்

(A) அன்பு
(B) ஆன்மா
(C) அரசன்
(D) இவை எதுவுமில்லை

4. மனித வடிவத்தோடு ஆலயத்தை ஒப்பிடும் போது பாதத்தை இவற்றோடு ஒப்பிடுவர்

(A) கோபுரம்
(B) நிருத்த மண்டபம்
(C) அர்த்த மண்டபம்
(D) கர்ப்பக் கிரகம்

5. வேத கடவுள்களில் விலங்குகளின் "தெய்வம்" என்று எந்த கடவுளை குறிப்பிடப்படுகிறது.

(A) இந்திரன்
(B) பிரஜாபதி
(C) விஷ்ணு
(D) ருத்திரர்

6. திருக்கோயிலில் உள்ள ஓர் பகுதியை ஸ்தூலலிங்கம் என குறிப்பிடுவர்.

(A) அர்த்த மண்டபம்
(B) மகா மண்டபம்
(C) கருவறை
(D) கோபுரம்



Teachingninja.in

7. கண்டம் முதல் வட்ட வடிவில் உள்ள விமானம்

(A) வேசரம்
(B) திராவிடம்
(C) நாகரம்
(D) இவை ஏதுமில்லை

8. வேதம் என்ற சொல் எந்த மூலச் சொல்லிலிருந்து பெறப்பட்டது?

(A) ரிதம்
(B) ப்ரு
(C) வித்
(D) சத்

9. குருவின் அருகில் சிரத்தையோடு அமர்ந்து கேட்டல் என்பது எதை விளக்கக் கூறப்படுகிறது?

(A) உபநிடதங்களை
(B) நான்கு பேருண்மைகளை
(C) அஷ்டாங்க யோகத்தை
(D) சன்மார்க்கத்தை

10. உபநிடதங்களின் முக்கியக் கோட்பாடு யாது?

(A) பிரம்மம் வேறு, ஆன்மா வேறு
(B) பிரம்மமும் உலகும் ஒன்று
(C) ஆன்மாவும் உலகும் ஒன்று
(D) பிரம்மமும் ஆன்மாவும் ஒன்று

11. உபநிடதக் கருத்தின் படி உலகைக் கடந்த பிரம்மத்தின் நிலைக்கு என்ன பெயர்?

(A) சகுண பிரம்மம்
(B) நிர்குண பிரம்மம்
(C) நிஷ்பிரபஞ்சம்
(D) ச - பிரபஞ்சம்

12. உபநிடதங்கள் பிரம்மத்தின் இரு நிலைகளில் ஒன்றை ச - பிரபஞ்சம் என்கிறது. மற்றொன்றின் பெயர் யாது?

(A) சகுண பிரம்மம்
(B) நிர்குண பிரம்மம்
(C) பிரம்ம பரிணாமம்
(D) நிஷ்பிரபஞ்சம்



Teachingninja.in

13. பண்டைய சாஸ்திரங்களில் திருக்கோயில்கள் கட்டுவதற்கான கட்டிடக்கலை பாணிகளின் வகைகள்

(A) இரண்டு
(B) மூன்று
(C) ஆறு
(D) நான்கு

14. திருமாலின் கருவிகளான பாஞ்சசன்னியம், கதாயுதம் மற்றும் நந்தகம் என்பவற்றின் அம்ச ஒப்புமை எந்த மூன்று ஆழ்வார்களுக்கு பொருந்தும்.

(A) பொய்கை, பூதம், பேயாழ்வார்
(B) பொய்கை, பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார்
(C) பொய்கை, பூதம், திருமழிசை ஆழ்வார்
(D) பொய்கை, பூதம், நம்மாழ்வார்

15. சாங்கியத்தை தோற்றுவித்தவர்

(A) கபிலர்
(B) ஜைமினி
(C) கணாதர்
(D) பதஞ்சலி

16. ________ ஆட்சி காலத்தை "இந்து இந்திய வரலாற்றின் பொற்காலம்" என்றழைக்கப்படுகிறது.

(A) சங்க காலம்
(B) குப்தர் காலம்
(C) சோழர் காலம்
(D) பாண்டியர் காலம்

17. கீழ்வருவனவற்றில் கடவுள் இல்லையெனக் கூறும் சமயம் எது?

(A) நியாயம்
(B) வைசேஷிகம்
(C) சமணம்
(D) யோகம்



Teachingninja.in

18. சடகோபர் எனப் பெயர் கொண்ட ஆழ்வார் யார்?

(A) பேயாழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) பூதத்தாழ்வார்
(D) மதுரகவியாழ்வார்

19. சமரச சன்மார்க்க சங்கத்தை நிறுவியவர்

(A) ஸ்ரீ ரமணர்
(B) பாம்பன் சுவாமிகள்
(C) சங்கராச்சாரியார்
(D) இராமலிங்க சுவாமி

20. மெய்கண்ட தேவ நாயனார் எழுதிய சாத்திரம்

(A) சிவஞான போதம்
(B) சிவப்பிரகாசம்
(C) திருவருட்பயன்
(D) உண்மை நெறி விளக்கம்

21. நம்மாழ்வாரைப் பற்றியே தனது பாசுரங்கள் அனைத்தும் எழுதிய ஆழ்வார்

(A) குலசேகராழ்வார்
(B) ஆண்டாள்
(C) மதுரகவியாழ்வார்
(D) பேயாழ்வார்

22. வழிபாட்டு வழி மூலம் கடவுளுடைய அருளைப் பெறுவது ———————— மார்க்கம்.

(A) பக்தி மார்க்கம்
(B) ஞான மார்க்கம்
(C) யோக மார்க்கம்
(D) சன் மார்க்கம்

23. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே"
எனக் கூறியவர் ————————.

(A) சுந்தரர்
(B) அப்பர்
(C) மாணிக்கவாசகர்
(D) திருஞானசம்பந்தர்



Teachingninja.in

24. தமிழகத்தில் சந்திரனுக்கு உகந்த ஸ்தலம் எங்குள்ளது?

(A) திங்களூர்
(B) திருவெண்காடு
(C) திருநள்ளாறு
(D) மதுரை

25. சனி பகவானுக்கு உகந்த ஊர்

(A) திருநாகேஷ்வரம்
(B) திருநள்ளாறு
(C) திருநாவலூர்
(D) திருவெண்காடு

26. 'இனியவை நாற்பது' ——————— நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

(A) கி.பி. 5–ம் நூற்றாண்டு
(B) கி.பி. 3–ம் நூற்றாண்டு
(C) கி.பி. 8–ம் நூற்றாண்டு
(D) கி.பி. 10–ம் நூற்றாண்டு

27. 'ஆருகத மதம்' என்றழைக்கப்படும் மதம்

(A) புத்த மதம்
(B) சமண மதம்
(C) இந்து மதம்
(D) இஸ்லாமிய மதம்

28. "ஊன நடனம் ஒருபால், ஒருபாலா
ஞானநடம், தான் நடுவே நாடு"
இப்பாடல் ——————— ல் அமைந்துள்ளது.

(A) திருவருட்பா
(B) திருவாசகம்
(C) திருவருட்பயன்
(D) திருப்பாவை

29. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்" என ஆரம்பிக்கும் பாடலை அருளியது யார்?

(A) வள்ளலார்
(B) திருமூலர்
(C) அப்பர்
(D) சுந்தரர்



Teachingninja.in

30. திருஅருட்பிரகாச வள்ளலார் சித்தி பெற்ற வருடம்

(A) 30.01.1874
(B) 01.03.1873
(C) 03.03.1875
(D) 23.10.1876

31. "அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"
என்ற மந்திரத்தை உருவாக்கம் செய்தவர்

(A) அருட்பிரகாச வள்ளலார்
(B) தாயுமானவர்
(C) சுந்தரர்
(D) திருஞானசம்பந்தர்

32. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறைந்த வருடம்

(A) 1886
(B) 1885
(C) 1887
(D) 1890

33. சுவாமி விவேகானந்தர் மறைந்த வருடம்

(A) 1902
(B) 1912
(C) 1927
(D) 1890

34. 'விவர்த்தவாதம்' எனப்படுவது

(A) ஒரு பொருள் இன்னொன்றாக மாறுவதாகக் கருதுவது
(B) ஒரு பொருள் இன்னொன்றாக மாறியிருந்தாலும் மாறாமல் இருப்பதாகக் கருதுவது
(C) ஒரு பொருள் அந்த நிலையிலேயே காணப்படுவது
(D) ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்தபடியே மாறிவிட்டதாகக் கருதுவது

35. உபநிடத வசனங்கள் மற்றும் யுக்தி, அனுபவம் ஆகியவற்றின் துணைக் கொண்டு தங்கள் கொள்கையை நிரூபிப்பவர்கள் —————— ஆகும்.

(A) சமணர்கள்
(B) பௌத்தர்கள்
(C) பொருள் முதல்வாதிகள்
(D) வேதாந்திகள்



Teachingninja.in

36. கடவுளின் ரூபங்கள் எத்தனை

(A) 4
(B) 1
(C) 2
(D) 3

37. ஓங்காரத்தினுள் அடங்கி இருப்பவர்

(A) ஜீவாத்மா
(B) மகாத்மா
(C) பரமாத்மா
(D) புனித ஆத்மா

38. மாசங்காரம் செய்தப் பிறகும் இறைவன்

(A) படைப்பதில்லை
(B) ஓய்வெடுப்பதில்லை
(C) நடனமாடுவதில்லை
(D) காப்பதில்லை

39. எந்தக் கடவுள் அக்கினியிலும், ஜலத்திலும், மரம், செடிகளிலும் அனைத்துலகங்களிலும் பிரவேசிக்கிறானோ "அந்தக் கடவுளுக்கு வணக்கம்" என கூறுவது

(A) சுவேதாசுவதர உபநிடதம்
(B) பகவத் கீதை
(C) திருக்குறள்
(D) சிலப்பதிகாரம்

40. யானை முதலிய மிருகங்களும், பாம்பு முதலியனவும் கட்டுப்படுவது

(A) பயத்தால்
(B) இசையால்
(C) சந்தோசத்தால்
(D) மந்திரத்தால்



Teachingninja.in

41. "சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்" என்று கூறுவது

(A) திருவள்ளுவர் (B) திருஞான சம்பந்தர்
(C) திருமூலர் (D) திருநாவுக்கரசர்

42. காயத்திரி மந்திரத்தில் உள்ள 24 எழுத்துக்களும் சுட்டிக் காட்டுவது

(A) எல்லா தேவர்களையும், தேவதைகளையும் (B) எல்லா மனிதர்களையும்
(C) எல்லா உயிரினங்களையும் (D) எல்லா நதிகளையும்

43. ஐந்தாம் வேதம் என சிறப்பித்து கூறப்படுவது

(A) மகாபாரதம் (B) இராமாயணம்
(C) விஷ்ணுபுராணம் (D) சிவபுராணம்

44. உயிர்களின் உருவ வேற்றுமைகள்

(A) பத்து இலட்சம் (B) ஐந்து இலட்சம்
(C) எண்பத்தி நான்கு இலட்சம் (D) தொன்னூறு இலட்சம்

45. உயிர்களின் நால்வகைத் தோற்றங்கள் பின்வருமாறு வரிசைப்படுத்தப்படுகின்றது.

(A) அண்டஜம், சுவேதஜம், உத்பிஜ்ஜம், சராயுஜம்
(B) சராயுஜம், உத்பிஜ்ஜம், சுவேதஜம், அண்டஜம்
(C) சுவேதஜம், உத்பிஜ்ஜம், சராயுஜம், அண்டஜம்
(D) உத்பிஜ்ஜம், சராயுஜம், அண்டஜம், சுவேதஜம்

46. உயிர்களின் தோற்றங்களில் சுவேதஜம் என்றால் என்ன?

(A) வேர்வையில் தோன்றுவன – கிருமி, பேன் முதலியன
(B) கருப்பையில் தோன்றுவன – மனிதரும், விலங்குகளும்
(C) முட்டையில் தோன்றுவன – பறவை, ஊர்வன, நீர்வாழ்வன
(D) வித்து, வேர், கொடி, கொம்பு, கிழங்கு இவற்றில் தோன்றுவன – இவை தாவரங்கள்



Teachingninja.in

47. கீழ்க்கண்ட எந்த பிறப்புக்களின் வரிசை சரியானது?

(A) தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்

(B) தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, தேவர், மனிதர்

(C) ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், தேவர், மனிதர், விலங்கு, பறவை

(D) பறவை, விலங்கு, மனிதர், தேவர், தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன

48. "அரிது அரிது மானுடராதல் அரிது" எனக் கூறியவர்

(A) பெரியார்
(B) ஔவையார்
(C) சீத்தலைச் சாத்தனார்
(D) பாரதியார்

49. ஐம்புலன்கள் பின்வருமாறு வரிசைப்படுத்தப்படுகின்றன.

(A) செவி, மூக்கு, கண், வாய், மெய்
(B) வாய், கண், மூக்கு, செவி, மெய்
(C) மெய், வாய், கண், மூக்கு, செவி
(D) மூக்கு, கண், வாய், செவி, மெய்

50. மனிதன் என்னும் சொல்லிலுள்ள "மன்" என்பதன் பொருள்

(A) நினைப்பவன்
(B) மன்னிப்பவன்
(C) சிரிப்பவன்
(D) தூங்குபவன்

51. ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களை அருள்வது

(A) மனிதன்
(B) கடவுள்
(C) இயற்கை
(D) விலங்கு

52. கரணத்தின் புறக்கருவிகள் எத்தனை?

(A) முப்பது
(B) அறுபது
(C) நாற்பது
(D) ஐம்பது



Teachingninja.in

53. சைவசித்தாந்தம் ஏற்கும் 'இரு வினையொப்பு' என்பது

(A) ஓட்டையும் பொன்னையும் சமமாகக் கருதக்கூடிய ஒரு மனோநிலை

(B) வேற்றுமையான மன நிலை

(C) பொன்னிற்கு பெறும் மதிப்பளிப்பர்

(D) அவ்வுலக வாழ்வைப் போற்றுவர்

54. பொருத்துக : மார்க்கங்களும் அடைவுகளும்

| | (அ) - மார்க்கம் | | (ஆ) - அடைவுகள் |
|---|---|---|---|
| (a) | சரியை மார்க்கம் | 1. | சாரூபம் |
| (b) | கிரியை மார்க்கம் | 2. | சாலோகம் |
| (c) | யோகம் மார்க்கம் | 3. | சாயிச்சியம் |
| (d) | ஞான மார்க்கம் | 4. | சாமீபம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

55. சைவசித்தாந்தத்தில் இறைவனது இயல்புகளை இருவிதமாக வருணிப்பது மரபு அவை

(A) ரூபம், அரூபம் மற்றும் ரூபாரூபம்

(B) அகண்ட நிலை மற்றும் கடந்த நிலை

(C) சொரூபம் மற்றும் தடத்தம்

(D) ரூபம் மற்றும் அரூபம்

56. கீழ்கண்டவற்றுள் சரியான இணையை தேர்வு செய்க

(A) திருவருள் பயன் – உமாபதி சிவாச்சாரியார்.

(B) வினா வெண்பா – அருள் நந்தி சிவாச்சாரியார்

(C) போற்றிப் பஃறொடை – மெய்கண்ட தேவநாயனார்

(D) கொடிக்கவி – திருகடவூர் உய்யவந்த தேவ நாயனார்



Teachingninja.in

57. பிரமை வர்த்தம் என்பது ———————— புராணமாகும்.

(A) அக்னி

(B) சூரியன்

(C) விஷ்ணு

(D) பிரம்மன்

58. திருவருட்பயன் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது

(A) பத்துப் பத்து வெண்பா

(B) எட்டுப் பத்து வெண்பா

(C) எட்டுத் தொகை வெண்பா

(D) இருபது வெண்பா

59. தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என அருளியவர்

(A) சிவஞான சித்தியார்

(B) திருவாதவூரர் மகிழ்செழுமறை முனிவர்

(C) சுந்தரர்

(D) வள்ளுவர்

60. "முத்தைத் தரு பத்தித் திருநகை" என்று பாடியவர்

(A) பாம்பன் சுவாமிகள்

(B) அருணகிரிநாதர்

(C) பாரதியார்

(D) மாணிக்கவாசகர்

61. திருவைந்தெழுத்து என்பது

(A) சிவசின்னம்

(B) எண்ணுதல்

(C) நமசிவாய

(D) சிவ தீக்கை

62. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது ஆகும் அறிகிலார்" என்ற தொடரை கூறியவர்

(A) சுந்தரர்

(B) மாணிக்கவாசகர்

(C) அப்பர்

(D) திருமூலர்



Teachingninja.in

63. சைவ சித்தாந்தத்தின் முதல் ஆசிரியராகக் கருதப்படுபவர் யார்?

(A) திருவள்ளுவர்

(B) தொல்காப்பியர்

(C) இளங்கோவடிகள்

(D) மெய்கண்டார்

64. உமாபதி சிவம் எழுதிய நூல்களில் ஒன்று

(A) திருவுந்தியார்

(B) திருக்களிற்றுப்படியார்

(C) சிவஞானசித்தியார்

(D) திருவருட்பயன்

65. அருள்நந்தி தேவர் எழுதிய நூலின் பெயர் யாது?

(A) திருவுந்தியார்

(B) திருக்களிற்றுப் படியார்

(C) சிவஞான சித்தியார்

(D) உண்மை விளக்கம்

66. சைவ சாத்திர நூல்களுக்கு வழங்கப்பெறும் வேறு பெயர் என்ன?

(A) மெய்கண்ட நூல்கள்

(B) மெய்யறு நூல்கள்

(C) புற நூல்கள்

(D) அக நூல்கள்

67. உயிர்களின் அவத்தைகள் எத்தனை?

(A) 1

(B) 2

(C) 3

(D) 4



Teachingninja.in

68. சுபக்கம், பரபக்கம் என இரு பிரிவுகள் கொண்ட சைவசித்தாந்த சாத்திர நூல்

(A) சங்கற்ப நிராகரணம்
(B) உண்மை நெறி விளக்கம்
(C) இருபா இருபது
(D) சிவஞான சித்தியார்

69. சைவசித்தாந்த சாத்திரங்களுள் உமாபதி சிவாசாரியார் மட்டும் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை

(A) ஐந்து நூல்கள்
(B) பத்து நூல்கள்
(C) எட்டு நூல்கள்
(D) ஆறு நூல்கள்

70. அடியில் கண்ட சைவசமயக் குரவர்களின் தடுத்தாட் கொண்ட சரியான இடங்களின் இணையை தேர்ந்தெடுக்க

(A) திருஞான சம்பந்தர் – சீர்காழி
(B) திருநாவுக்கரசர் – திருவெண்ணெய் நல்லூர்
(C) சுந்தரர் – திருப்பெருந்துறை
(D) மாணிக்கவாசகர் – திருவதிகை

71. சைவசித்தாந்த சாத்திரங்களின் வகைகள் இரண்டு. அவை

(A) பதி, பசு
(B) தோத்திரம், சாத்திரம்
(C) பசு, ஆன்மா
(D) சிற்றம்பலம், பஞ்சாட்சரம்

72. நான் பிரம்மம் – இந்த பொருளை கொண்ட உபநிடத வாக்கியம் எது?

(A) தத்துவமஸி
(B) அகம் பிரம்மாஸ்மி
(C) சோ(அ)கம் அஸ்மி
(D) இவற்றுள் எதுவுமில்லை

73. சைவம் கூறும் பாசத்தின் செயல் என்ன?

(A) உயிர்களை காப்பது
(B) உயிர்களை அழிப்பது
(C) உயிர்களை மகிழ்விப்பது
(D) உயிர்களை கட்டுவது



Teachingninja.in

74. தமிழ்மொழியில் வழிபாடுகளைச் செய்து வந்த பழந்தமிழ் அந்தணர்கள் யார்?

(A) நந்தி தேவர்
(B) வீரமா முனிவர்
(C) ஆதிசைவர் என்ற குருக்கள்மார்
(D) சித்தர்கள்

75. "சைவம்" "சிவன்" என்னும் சொற்களை முதன் முதலாக வழங்கியவர்

(A) மாணிக்கவாசகர்
(B) நாவுக்கரசர்
(C) சுந்தரர்
(D) ஊரான் அடிகள்

76. சைவசித்தாந்த் சாத்திரங்களில் முதன்மையானது

(A) சிவ பிரகாசம்
(B) சிவஞான சித்தியார்
(C) சிவஞான போதம்
(D) உண்மை நெறி

77. கல்யானைகள் தம்முடைய தும்பிக்கையால் நடராசப் பெருமானின் திருவடியில் வைத்த நூல்

(A) திருவுந்தியார்
(B) திருக்களிற்றுப்படியார்
(C) சிவஞான போதம்
(D) சிவஞான சித்தியார்

78. கீழ்வருவனவற்றுள் வைஷ்ணவம் ஏற்றுக் கொள்ளாத பிரமாணத்தை கண்டுபிடி

(A) உபமானம்
(B) பிரத்தியக்ஷயம்
(C) அனுமானம்
(D) சப்தம்

79. பிரமாணங்களில் சிறந்ததாக வைஷ்ணவம் கருதுவது

(A) அர்த்தாபதி
(B) சப்தம் (சுருதி)
(C) பிரத்தியக்ஷயம்
(D) அனுமானம்

80. "பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை

ஐயன் அருள்மாறன் சேரலர்கோன்" என்னும் செய்யுள் உணர்த்துவது

(A) ஆழ்வார்களின் திருநாமங்கள்
(B) நாயன்மார்களின் திருநாமங்கள்
(C) சமணர்களின் திருநாமங்கள்
(D) பௌத்தர்களின் திருநாமங்கள்



Teachingninja.in

81. இரண்டாமாயிரம் அல்லது திருமொழி இயற்றிய ஆழ்வார் யார்?

(A) திருமங்கையாழ்வார்
(B) பூதத்தாழ்வார்
(C) பேயாழ்வார்
(D) நம்மாழ்வார்

82. அரங்கனின் அழகைக் கண்டு பாடிய "அமலனாதிப்பிரான்" என்று தொடங்கும் பத்து பாசுரங்களை பாடியவர் யார்?

(A) திருமங்கையாழ்வார்
(B) தொண்டரடிப் பொடியாழ்வார்
(C) திருப்பாணாழ்வார்
(D) மதுர கவியாழ்வார்

83. "ஓங்கி உலகளந்த உத்தம பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்கு சாற்றிநீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து ..."
என்ற பாடலை பாடியவர் யார்?

(A) திருமங்கையாழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) ஆண்டாள்
(D) பெரியாழ்வார்

84. இராமானுஜர் ஓர்

(A) விவர்த்தவாதி
(B) சத்காரியவாதி
(C) பரிணாமவாதி
(D) ஏகாந்தவாதி

85. திருமாலின் பெருமைகளை அழகுற பாடியவர்கள் ———————— ஆவர்.

(A) ஆச்சாரியர்கள்
(B) நாயன்மார்கள்
(C) ஆழ்வார்கள்
(D) புலவர்கள்

86. கீழ்க்கண்டவற்றுள் விஷ்ணு புராணம் அல்லாதது எது?

(A) கூர்மம்
(B) நாரதீயம்
(C) வைஷ்ணவம்
(D) பாகவதம்

87. 'பரிணாமவாதம்' ஏற்கும் வேதாந்தகர் இவர்

(A) நிம்பார்கர்
(B) இராமானுஜர்
(C) சங்கரர்
(D) வல்லபர்



Teachingninja.in

88. சரியாகப் பொருந்தாத இணையைக் காண்க

I. பொய்கையாழ்வார் – முதல் திருவந்தாதி

II. பூதத்தாழ்வார் – இரண்டாம் திருவந்தாதி

III. பேயாழ்வார் – மூன்றாம் திருவந்தாதி

IV. திருமழிசையாழ்வார் – கண்ணிநுண் சிறுத்தாம்பு

(A) I (B) II

(C) III (D) IV

89. கீழ்வருவனவற்றுள் நம்மாழ்வார் பாடாத பிரபந்தம் எது?

(A) முதல் திருவந்தாதி (B) திருவிருத்தம்

(C) திருவாசிரியம் (D) திருவாய்மொழி

90. ஆழ்வார்களின் பாடல்களை முறைப்படுத்தி தொகுத்தவர்

(A) பூதத்தாழ்வார் (B) நாத முனிகள்

(C) பேயாழ்வார் (D) பொய்கையாழ்வார்

91. பன்னிரு ஆழ்வார்கள் பாடிய திருப்பாடல்கள்

(A) 2000 (B) 3776

(C) 3000 (D) 4000

92. "ஒருவர் கிடக்கலாம் ; இருவர் இருக்கலாம் ; மூவர் நிற்கலாம்" எனப்பாடிய ஆழ்வார்

(A) பெரியாழ்வார் (B) பொய்கையாழ்வார்

(C) நம்மாழ்வார் (D) திருமங்கையாழ்வார்

93. தம் பாடலை "ஞானத் தமிழ்" என அழைத்த ஆழ்வார் யார்?

(A) ஆண்டாள் (B) நம்மாழ்வார்

(C) பூதத்தாழ்வார் (D) பெரியாழ்வார்



Teachingninja.in

94. ஆன்மாவை மயங்கச் செய்வது எது?

(A) இன்பம்
(B) மாயை
(C) துன்பம்
(D) பெருமை

95. மனிதனுடைய செயல்கள் யாவும்

(A) தர்மமே
(B) கன்மமே
(C) மர்மமே
(D) வறுமையே

96. ஜீவாத்மா, பரமாத்மாக்களை இரண்டு பறவைகளுக்கு ஒப்பிட்டுள்ள உபநிடதம்

(A) கேனா உபநிடதம்
(B) ஈசா உபநிடதம்
(C) முண்டக உபநிடதம்
(D) கதா உபநிடதம்

97. பின்வருவனவற்றில் முதலாழ்வார்களைப் பற்றிய எக்கூற்றுகள் சரியானவை

I. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

II. ஒருவரையொருவர் அறியாதவர்கள்

III. வேறு வேறு காலத்தைச் சார்ந்தவர்கள்

IV. திருவந்தாதிகளை அருளியவர்கள்

V. தாயின் வயிற்றிலிருந்து தோன்றியவர்கள்

(A) அனைத்தும் சரியானவை
(B) I, III மற்றும் IV மட்டும் சரியானவை
(C) I, II மற்றும் IV மட்டும் சரியானவை
(D) I மட்டும் சரியானது

98. ப்ரஹ்மஸூத்திரத்தை இயற்றியவர்

(A) இராமானுஜர்
(B) வால்மீகி
(C) ஜைமினி
(D) பாத்ராயணர்

99. இராமானுஜர் ———————— என்ற ஊரில் ———————— ஆம் ஆண்டு அவதரித்தார்.

(A) ஸ்ரீரங்கம், கி.பி. 1019
(B) அநந்தேசுவரம், கி.பி. 1027
(C) ஸ்ரீபெரும்புதூர், கி.பி. 1017
(D) மருதூர், கி.பி. 1008

100. மும்மலங்கள் என அழைக்கப்படுவது எது?

(A) குரோதம், லோபம், மோகம்
(B) ஆணவம், மாயை, கன்மம்
(C) அருத்தம், புத்திரன், உலகம்
(D) வைகரி, மத்திமை, பரை



Teachingninja.in

101. நாம் காணும் இந்த உலகம்

(A) தோன்றும்
(B) அழியும்
(C) தோன்றியழியும்
(D) தோன்றாது

102. சகல நிலையில்

(A) இருவினை ஒப்பு ஏற்படுகிறது
(B) தனு, கரண, புவன, போகங்கள் கொடுக்கப்படுகின்றன
(C) அறியாமையால் உயிர் சூழப்பட்டுள்ளது
(D) மேற்கண்ட மூன்றும்

103. "மனனம் செய்பவனை திராணனம் செய்வது"

(A) தந்திரமாகும்
(B) எந்திரமாகும்
(C) மந்திரமாகும்
(D) சிறந்ததாகும்

104. கொடிமரத்தின் எண் கோணமாய் இருக்கும் பகுதி என்ன பாகம்?

(A) பிம்ம பாகம்
(B) விஷ்ணு பாகம்
(C) உருத்திர பாகம்
(D) சிவ பாகம்

105. கொடிமரத்தின் மேல் குதிரையை அமைக்கும் கோயில்

(A) சிவன் கோயில்
(B) விஷ்ணு கோயில்
(C) சாஸ்தா கோயில்
(D) முருகன் கோயில்

106. கோயிலில் பலி பீடம் எதை உணர்த்துகிறது?

(A) அன்பை
(B) பாசத்தை
(C) துன்பத்தை
(D) மகிழ்ச்சியை



Teachingninja.in

107. கோயில் விமானங்கள் எத்தனை வகைப்படும்?

(A) 2 வகைப்படும்
(B) 3 வகைப்படும்
(C) 4 வகைப்படும்
(D) 5 வகைப்படும்

108. பிரம்மனும் ஆன்மாவும் வேறானவை என்ற நிலைப்பாடு உடையவர் ————————.

(A) மத்துவர்
(B) சங்கரர்
(C) இராமானுசர்
(D) மணிவாசகர்

109. ஜீவன்களுக்குமிடையே உள்ள வேற்றுமையினை மத்துவர் ———————— இவ்வாறு அழைப்பார்.

(A) சீவேசுவரபேதம்
(B) சீவசடபேதம்
(C) சீவபரஸ்பரபேதம்
(D) சடபரஸ்பரபேதம்

110. "தகராலயரகஸியம்" என்ற நூலின் ஆசிரியர் ———————— ஆவர்.

(A) பாம்பன் சுவாமிகள்
(B) அப்பர்
(C) நம்மாழ்வார்
(D) சேக்கிழார்

111. வேசர விமானத்தை எந்த பாலின விமானமாக கூறுவர்?

(A) ஆண் விமானம்
(B) பெண் விமானம்
(C) அலி விமானம்
(D) இவை எதுவுமில்லை

112. கோயிலின் பீடம் முதல் அனைத்தும் சதுரமாக உள்ள விமானம் எந்த வகையை சார்ந்தது?

(A) திராவிடம்
(B) வேசரம்
(C) நாகரம்
(D) இவை எதுவும் இல்லை



Teachingninja.in

113. கீழ்க்கண்ட உரைகளை ஆய்க :

1. இந்து மத கிளைகளாக பல மதங்கள் உள்ளன.
2. கடவுள் இல்லை என்று சொல்கின்ற மதங்கள் இல்லை

எந்த உரை / உரைகள் சரியானது

(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் சரி இல்லை

114. கீழ்க்கண்டவற்றில் எது தவறான இணை?

(A) சாங்கியம் - கபிலர்
(B) அத்வைதம் – சங்கரர்
(C) யோகம் - ஜைமினி
(D) வைசேடிகம் – கணாதர்

115. கடவுள் இல்லையெனக் கூறும் சமயங்கள்

1. பௌத்தம்
2. சமணம்
3. அத்வைதம்
4. சாருவாகம்

(A) 1 மட்டுமே சரி
(B) 1, 2 மட்டுமே சரி
(C) 1, 2 மற்றும் 4 மட்டுமே சரி
(D) 1, 2 மற்றும் 3 மட்டுமே சரி

116. பின்வருவனவற்றுள் சிவபெருமானின் சிகையை அலங்கரிப்பவை

(A) கங்கை, பாம்பு
(B) பிறை, பாம்பு
(C) கங்கை, பிறை
(D) பிறை, சூலம்



Teachingninja.in

117. ‘சநாதனதர்மம்’ என்று அழைக்கப்படும் மதம்

(A) புத்த மதம்
(B) இந்து மதம்
(C) ஜைன மதம்
(D) இஸ்லாமிய மதம்

118. எல்லாப் பொருளிலும் விஷ்ணு உள்ளிருந்து இயங்கும் நிலைக்கு ———————— எனப்பெயர்.

(A) வியூகம்
(B) விபவம்
(C) அந்தரியாமி
(D) அச்சை

119. பொருத்துக :

(a) சங்கரர் — 1. விசிஷ்டாத்வைதம்
(b) இராமானுஜர் — 2. நடைமுறை வேதாந்தம்
(c) மத்துவாச்சாரியார் — 3. அத்வைதம்
(d) விவேகானந்தர் — 4. துவைதம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

120. திருமுறைகளின் எண்ணிக்கை ———————— ஆகும்.

(A) 18
(B) 12
(C) 9
(D) 6

121. விஷ்ணுவின் கடைசி அவதாரத்தின் பெயர் என்ன?

(A) மச்சாவதாரம்
(B) பரசுராமவதாரம்
(C) கல்கி அவதாரம்
(D) நரசிங்க அவதாரம்



Teachingninja.in

122. பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தவர்

(A) தயானந்த சரஸ்வதி

(B) இராஜாராம் மோகன் ராய்

(C) ஈஸ்வர சந்திர வித்தியாசாகர்

(D) இராமகிருஷ்ணர்

123. சைவ சமயத்திற்கு முதல் குரு —————————— ஆவார்.

(A) அப்பர்

(B) சுந்தரர்

(C) மாணிக்கவாசகர்

(D) திருநந்திதேவர்

124. "உள்ளது போகாது ; இல்லது வராது" எனப்படுவது——————————.

(A) இயற்கை வாதம்

(B) உண்மை வாதம்

(C) சத்காரிய வாதம்

(D) அசத்காரிய வாதம்

125. சப்த மாதர்கள் எத்தனை பேர்?

(A) 9

(B) 3

(C) 4

(D) 7

126. சக்தி பீடங்கள் எத்தனை?

(A) 24

(B) 51

(C) 12

(D) 18

127. சண்முக நதி எங்குள்ளது?

(A) மதுரை

(B) திருத்தணி

(C) பழனி

(D) திருச்செந்தூர்



Teachingninja.in

128. நிஷ்களம் என எதனை குறிப்பிடுவர்?

(A) கொடிமரம்
(B) லிங்கம்
(C) வேல்
(D) பிரகாரம்

129. 'திருமுருகாற்றுப்படை' பாடலை அருளியவர்

(A) அருணகிரியார்
(B) குமரகுருபரர்
(C) கபிலர்
(D) நக்கீரர்

130. திருக்கோயில் கும்பாபிஷேகம் முடித்து மூன்று பட்சம் கழித்து செய்யப்படும் ஆராதனைக்கு ———————— என்று பெயர்.

(A) மகாபிஷேகம்
(B) மண்டலாபிஷேகம்
(C) கலாகர்ஷணம்
(D) அட்டபந்தனம்

131. 'சஷ்டி அப்த பூர்த்தி' – என்பது ———————— ஆண்டு நிறைவு விழாவை குறிப்பதாகும்.

(A) எண்பது
(B) நாற்பத்தெட்டு
(C) அறுபது
(D) நூறு

132. "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" என்ற பாடல் வரிக்கு சொந்தக்காரர்

(A) திருஅருட்பிரகாச வள்ளலார்
(B) திருவள்ளுவர்
(C) ஈ.வி. இராமசாமி பெரியார்
(D) மகாகவி பாரதியார்

133. திருஅருட்பிரகாச வள்ளலார் பிறந்த தினம்

(A) 15.5.1833
(B) 10.05.1823
(C) 05.10.1833
(D) 05.10.1823



Teachingninja.in

134. வேதாந்திகள் மெய்ப்பொருளை மூன்று நிலையில் பேசுவர் அவை ———————— ஆகும்.

(A) வியாவகாரியம், சத்காரியம் மற்றும் பாரமார்த்திகம்

(B) சத்காரியம், வியாவகாரியம் மற்றும் ஆரம்பவாதம்

(C) பிராதிபாஷிகம், வியாவகாரியம் மற்றும் பாரமார்த்திகம்

(D) பாரமார்த்திகம், பிராதிபாஷிகம் மற்றும் ஆரம்பவாதம்

135. ஓர் நாமம், ஊர், குணம், வடிவம் இல்லாதவர்

(A) மனிதன் (B) கடவுள்

(C) மிருகம் (D) விண்மீன்

136. கண்ணுக்கு புலப்படாமல் இருப்பவர்

(A) எழுத்தாளர் (B) கடவுள்

(C) ஆசிரியர் (D) மருத்துவர்

137. "ஓம்" எனும் பிரணவத்தில் தோன்றும் எழுத்துக்களின் எண்ணிக்கை

(A) ஒன்று (B) இரண்டு

(C) மூன்று (D) நான்கு

138. கடவுளின் அரூபம் எத்தனை

(A) 1 (B) 2

(C) 4 (D) 3



Teachingninja.in

139. நமச்சிவாய என்பதன் பொருள்

(A) சிவனுக்கு வணக்கம்

(B) சிவனடியார்களுக்கு வணக்கம்

(C) சிவகோத்திரத்திற்கு வணக்கம்

(D) முருகனுக்கு வணக்கம்

140. மகாமநு என்ற பஞ்சாக்கரத்தின் பயன்

(A) சிவமேயாக்கும்

(B) மலத்தை நாசம் பண்ணும்

(C) இம்மை மறுமைப் பயன் அளிக்கும்

(D) பாசத்தைக் கொடுக்கும்

141. அத்வைத வேதாந்தத்தின் வேறு பெயர்

(A) பேதா பேத வாதம்

(B) அபேத வாதம்

(C) பேதவாதம்

(D) பிரதித்யசமுத்பாதம்

142. பஞ்ச பூதத்தில் பிருதிவியின் அதி தேவதை

(A) விஷ்ணு

(B) இராமன்

(C) சிவன்

(D) முருகன்

143. பஞ்ச பூதங்களை பின்வருமாறு வரிசைப்படுத்தப்படுகின்றது

(A) ஆகாசம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி

(B) அப்பு, பிருதிவி, தேயு, வாயு, ஆகாசம்

(C) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்

(D) தேயு, வாயு, ஆகாசம், அப்பு, பிருதிவி



Teachingninja.in

144. உயிர்களின் உத்பிஜ்ஜய தோற்றம் என்பது

(A) கருப்பையில் தோன்றுவன – மனிதரும், விலங்குகளும்

(B) வித்து, வேர், கொடி, கொம்பு, கிழங்கு இவற்றில் தோன்றுவன – இவை தாவரங்கள்

(C) முட்டையில் தோன்றுவன – பறவை, ஊர்வன, நீர் வாழ்வன

(D) வேர்வையில் தோன்றுவன – கிருமி, பேன் முதலியன

145. உயிர்களின் தோற்றத்தில் சராயுஜம் என்றால் என்ன?

(A) முட்டையில் தோன்றுவன – பறவை, ஊர்வன, நீர் வாழ்வன

(B) கருப்பையில் தோன்றுவன – மனிதரும், விலங்குகளும்

(C) வேர்வையில் தோன்றுவன –கிருமி, பேன் முதலியன

(D) வித்து, வேர், கொடி, கொம்பு, கிழங்கு இவற்றில் தோன்றுவன – இவை தாவரங்கள்

146. மனிதர்களின் பிறப்பில் உள்ள பேதங்கள்

(A) ஒன்பது இலட்சம்
(B) பத்து இலட்சம்
(C) பதினொறு இலட்சம்
(D) பனிரெண்டு இலட்சம்

147. நீர்வாழ்வன பிறப்பில் உள்ள பேதங்கள்

(A) ஐந்து இலட்சம்
(B) இரண்டு இலட்சம்
(C) பத்து இலட்சம்
(D) இருபது இலட்சம்

148. தாவரம் உயிரினத்தில் உள்ள பேதங்கள்

(A) பத்தொன்பது இலட்சம்
(B) இருபத்தொன்பது இலட்சம்
(C) முப்பத்தொன்பது இலட்சம்
(D) நாற்பத்தொன்பது இலட்சம்



Teachingninja.in

149. ஆணவ மலத்தின் எட்டு இயல்புகளும், மாயாமலத்தின் ஏழு இயல்புகளை காட்டும் இருபா இருபஃது எனும் சைவ சாத்திர நூல் கன்ம மலத்திற்கு கூறும் இயல்புகளின் எண்ணிக்கை

(A) ஒன்பது இயல்புகள்

(B) பத்து இயல்புகள்

(C) பன்னிரண்டு இயல்புகள்

(D) ஆறு இயல்புகள்

150. திருவைந்தெழுத்தின் வகையினை பொருத்துக

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (a) | ஸ்தூல பஞ்சாட்சரம் | 1. | நம சிவயா |
| (b) | சூக்கும பஞ்சாட்சரம் | 2. | சிவாயநம |
| (c) | அதிசூக்கும பஞ்சாட்சரம் | 3. | சிவாயசிவ |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 1 |
| (D) | 3 | 1 | 2 |

151. சைவசித்தாந்த தத்துவத்தின்படி, முத்தியில் ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்தபோதும் தன் தனி இயல்பை முற்றாய் இழந்து விடுவதில்லை இக்கலப்புக்குத் தமிழில் ____________ என்ற சொல்லைக் காட்டுவது மரபு.

(A) 'மொழிதலை'

(B) 'தாடலை'

(C) 'கர்மவினை'

(D) 'வினையீடு'

152. பின்வரும் சைவசித்தாந்தக் கூற்றை கவனித்து விடை அளிக்கவும்

கூற்று 1 : மலங்கள் நீங்கும் நிலையினை 'மலபரிபாகம்' என்பர்

கூற்று 2 : ஆன்மாவின் மேல் விழும் இறைவனின் அருள் வீழ்ச்சியே சத்துனிபாதம் என்பர்.

(A) கூற்று 1 மற்றும் கூற்று 2 ம் தவறு

(B) கூற்று 1 தவறு மற்றும் கூற்று 2 சரி

(C) கூற்று 1 மற்றும் கூற்று 2 ம் சரி

(D) கூற்று 1 சரி மற்றும் கூற்று 2 தவறு



Teachingninja.in

153. அகச் சந்தானக் குரவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்

(A) மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர்

(B) நந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசினி, பரஞ்சோதி

(C) அருள்நந்தி சிவம், மெய்கண்டார், மறைஞானசம்பந்தர்

(D) நந்திதேவர், மெய்கண்டார், சுந்தரர், சனற்குமாரர்

154. "அவையே தானே ஆயிரு வினையில்

போக்கு வரவு புரிய ஆணையின்

நீக்கமின்றி நிற்கும் அன்றே" – இது

எந்த சித்தாந்த சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது?

(A) வினா வெண்பா – நேரிசை வெண்பா

(B) சிவஞான சித்தியார் – ஏழாவது பாடல்

(C) சிவஞான போதம் – இரண்டாம் சூத்திரம்

(D) சிவபிரகாசம் – விருத்தப்பாவில்

155. பதினான்காம் நூற்றாண்டில் திருவொற்றியூர் தலபுராணத்தை பாடியவர் யார்?

(A) கச்சியப்ப முனிவர்

(B) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(C) ஞானப்பிரகாசர்

(D) வீரராகவ முதலியார்

156. நரசிம்மவர்ம பல்லவன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் "————" என்ற வசனம் காணப்படுகிறது.

(A) "நான் ஒரு பௌத்தன்"

(B) "நான் ஒரு நாத்திகன்"

(C) "நான் ஒரு வேதாந்தி"

(D) "நான் ஒரு சைவ சித்தாந்தி"

157. 'ஆகமம்' என்ற சொல்விற்கு பொருள்

(A) 'மனிதனுக்கு மனிதனால் அளிக்கப்பட்டது'

(B) 'பதி, பசு, பாசம் போன்ற முப்பொருள் பற்றி கூறுவது'

(C) 'சான்றோர்களால் அமைக்கப்பட்டது'

(D) 'தமிழிலிருந்து சமஸ்கிருதத்திற்கு சென்றது'



Teachingninja.in

158. தமிழகத்துச் சைவ ஆதினங்கள் எத்தனை?

(A) பதிமூன்று
(B) பதினெட்டு
(C) நான்கு
(D) மூன்று

159. சைவத்தில் கூறப்படும் மூவகை ஆன்மாக்கள்

(A) சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்
(B) கேவலம், சகலம், சுத்தம்
(C) பதி, பசு, பாசம்
(D) மோகம், மதம், செருக்கு

160. மூவகை ஆன்மாக்களில் சரியில்லாத இணையைத் தேர்க

| | | | |
|---|---|---|---|
| I. | சகலர் | – | அருவுருவ நிலையினர் |
| II. | பிரளயாகலர் | – | காணும் உருவினர் |
| III. | விஞ்ஞானகலர் | – | அருவநிலையினர் |
| IV. | சுத்தம் | – | மருள்நிலை |

(A) I சரியானது
(B) II சரியானது
(C) III சரியானதல்ல
(D) IV சரியானது

161. சிவதத்துவத்தில் சரியில்லாத இணையை காண்க

| | | | |
|---|---|---|---|
| I. | சுத்தவித்தை | – | ஞானமே வடிவாக இருக்கும் |
| II. | ஈச்சுரம் | – | ஆற்றலே வடிவாக இருக்கும் |
| III. | சதாசிவம் | – | ஞானமும், கிரியையும் சமமாக இருக்கும் |
| IV. | சிவம் | – | ஞானம் மிகுந்து கிரியை குறைவாக இருக்கும் |

(A) I சரியானது
(B) II, IV சரியானது அல்ல
(C) III சரியானது
(D) IV சரியானது


Teachingninja.in

162. இடைக்காலத்து இலக்கியத்தில் தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கை பற்றி அறிவிக்கும் நூல் எது?

(A) கோயில் நான்மணிமாலை
(B) பெரிய புராணம்
(C) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
(D) திருவாலூர் மும்மணி கோவை

163. மாயையின் வகை யாவை?

(A) பசுமாயை, பாச மாயை
(B) சுத்தமாயை, அசுத்தமாயை
(C) கன்மம் மாயை, பாசமாயை
(D) பாசமாயை, சுத்தமாயை

164. சிவ தத்துவம் எத்தனை?

(A) இருபத்தி நான்கு
(B) ஏழு
(C) ஐந்து
(D) ஒன்பது

165. சைவசமயக் குறவர்களையும் அவர்கள் இறைவனடியை அடைந்த இடங்களையும் பொருத்துக :

(a) திருஞான சம்பந்தர் — 1. சிதம்பரம்
(b) திருநாவுக்கரசர் — 2. கயிலாயம்
(c) சுந்தரர் — 3. திருப்புகலூர்
(d) மாணிக்கவாசகர் — 4. திருநல்லூர்ப் பெருமணம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

166. அடியவர்களையும் அவர்கள் வாழ்ந்த காலத்தையும் பொருத்துக :

(a) திருஞானசம்பந்தர் — 1. 81 ஆண்டுகள்
(b) திருநாவுக்கரசர் — 2. 16 ஆண்டுகள்
(c) சுந்தரர் — 3. 32 ஆண்டுகள்
(d) மாணிக்கவாசகர் — 4. 18 ஆண்டுகள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |



Teachingninja.in

167. சக்தியும் சிவமும் இணைந்த இறைவெளிப்பாடு எது?

(A) அறங்காவலர்
(B) அறுபடைவீரர்
(C) ஆளுடையப்பர்
(D) அம்மையப்பர்

168. சைவ கூற்றுப்படி சிவனின் அருளாக வெளிப்படுவது

(A) அன்பு
(B) அதிகாரம்
(C) சக்தி
(D) பக்தி

169. சைவசித்தாந்தற்படி இறையருள் பெறும் நிலை என்பது என்ன?

(A) மலபரிபாதம்
(B) சத்தினி பாதம்
(C) இறைபாதம்
(D) ஞானபாதம்

170. சைவத்தின் பொற்காலம் எனப்படுவது

(A) சோழர்கள் காலம்
(B) பாண்டியர்கள் காலம்
(C) பல்லவர்கள் காலம்
(D) சேரர்கள் காலம்

171. உலகிலுள்ள அனைத்து உருவங்களிலும் முழுமையும் அழகும் மிகுந்தது என்று எந்த கோவில் இறைவனை "பிரான்சு" சிற்பி உரோடின் பாராட்டியுள்ளார்?

(A) சிதம்பரம் நடராஜர்
(B) திருவாலங்காடு நடராஜர்
(C) தஞ்சை கோவில் சிவன்
(D) கங்கை கொண்ட சோழபுரம் சிவம்

172. சிவஞான போதத்தில் உள்ள இரண்டு பெரும் பிரிவுகள் யாவை?

(A) வெண்பா, அந்தாதி
(B) பொது அதிகாரம், சிறப்பு அதிகாரம்
(C) சொல் அதிகாரம், பாடல் அதிகாரம்
(D) திருப்புகழ், அந்தாதி

173. சந்தானக் குரவர்கள் என அழைக்கப்படுபவர்கள்

(A) சுந்தரர், மாணிக்கவாசகர், நாவுக்கரசர்
(B) மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம்
(C) பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்
(D) மாணிக்கவாசகர், ஆண்டாள், உமாபதி



Teachingninja.in

174. "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து அடியை அடைந்து, உள்ளந்தேறி, ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்று கூறியவர்

(A) பேயாழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) பெரியாழ்வார்
(D) பொய்கையாழ்வார்

175. விஷ்ணு என்னும் உயர்ந்த தெய்வத்தை எதனால் அறிய முடியும்?

(A) பழ மொழிகளால்
(B) வேதங்களினால்
(C) மந்திரத்தால்
(D) தந்திரத்தால்

176. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் உள்ள மொத்த நூல்கள், பாடல்கள் எத்தனை?

(A) நூல்கள் - 24 பாடல்கள் 3776
(B) நூல்கள் - 100 பாடல்கள் 1020
(C) நூல்கள் - 10 பாடல்கள் 51
(D) நூல்கள் - 223 பாடல்கள் 1234

177. திருவேங்கடத்தில் சிவனும், திருமாலும் இணைந்திருக்கும் திருக்கோலத்தை கண்டதாக கூறிய ஆழ்வார் யார்?

(A) பொய்கையாழ்வார்
(B) பூதத்தாழ்வார்
(C) பேயாழ்வார்
(D) ஆண்டாள்

178. ஆழ்வார்கள் பன்னிருவரில் (12 பேர்) முதல் ஆழ்வார் என அழைக்கப்படும் மூவர் யார்?

(A) (1) பொய்கையாழ்வார் (2) பூதத்தாழ்வார் (3) பேயாழ்வார்
(B) (1) திருமழிசையாழ்வார் (2) பெரியாழ்வார் (3) ஆண்டாள்
(C) (1) மதுரகவியாழ்வார் (2) திருமங்கையாழ்வார் (3) தொண்டரடிப் பொடியாழ்வார்
(D) (1) பேயாழ்வார் (2) பெரியாழ்வார் (3) திருமங்கையாழ்வார்

179. நாலாயிரத் திவ்வியபிரபந்தத்தில் முதலாயிரம் தொகுத்தவர்களின் சரியான இணையை காண்க.

(A) திருப்பல்லாண்டு – பெரியாழ்வார்
(B) பெரியாழ்வார் திருமொழி – ஆண்டாள்
(C) திருப்பாவை – பெரியாழ்வார்
(D) நாச்சியார் திருமொழி – ஆண்டாள்



Teachingninja.in

180. இறை நம்பிக்கையும் அர்பணிப்பும் சேர்ந்த நிலைப்பாடு எது?

(A) பக்தி
(B) சேவை
(C) பிரபத்தி
(D) சமூக அர்பணிப்பு

181. இராமானுஜர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரையின் பெயரென்ன?

(A) ஸ்ரீபாஷ்யம்
(B) வேதாத்தம்
(C) சித்தஞானம்
(D) துவைதம்

182. வால்மீகி முனிவர் நாரதரிடம் கேட்ட கேள்வி : "எவன் கலியாண குணகணங்கட்டுக் கடலாயிருப்பவன்?" நாரதரின் பதில் என்ன?

(A) முருகனே
(B) இராமபிரானே
(C) பிரம்மனே
(D) சிவனே

183. "எம்பெருமான் திருநாமங்களைக் கூறுவது மிகச்சிறந்த தருமம்" என்று கூறுவது

(A) தருமன்
(B) பீஷ்மர்
(C) முருகன்
(D) அனுமான்

184. கு +ர் + உ = குரு, இவற்றுள் "உ" என்பது எதனை குறிக்கின்றன.

(A) சித்தி
(B) பாபம்
(C) சிவன்
(D) வடி



Teachingninja.in

185. 6ம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் தோன்ற காரணம் ———————— ஆகும்

(A) சமய பூசல்கள்
(B) ஒற்றுமையின்மை
(C) புத்த, சமண சமயங்களின் வளர்ச்சி
(D) அமைதியின்மை

186. திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகத்தையும், ஆண்டாளின் திருப்பாவையும் நாலாயிர பிரபந்தத்தின்

(A) ஆன்மா
(B) இருகண்கள்
(C) உடம்பு
(D) தூண்கள்

187. பேயாழ்வார் திருமாலோடு திருமகளையும் இணைத்துப் பாடியதன் விளைவாகத் தோன்றிய கொள்கை

(A) ஸ்ரீவைணம்
(B) கோகுலம்
(C) சமண சமயம்
(D) பாகவதம்

188. "கோதை நாச்சியார்" என அழைக்கப்படும் ஆழ்வார்

(A) பெரியாழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) ஆண்டாள்
(D) மதுரகவியாழ்வார்

189. "அன்பாவாய், ஆரமுதம் ஆவாய் அடியேனுக்கு
இன்பாவாய் எல்லாமும் நீ ஆவாய்"
எனப்பாடிய ஆழ்வார்

(A) மதுரகவியாழ்வார்
(B) திருமழிசையாழ்வார்
(C) திருமங்கையாழ்வார்
(D) நம்மாழ்வார்

190. கருடனை அருகில் வைத்துள்ள கடவுள் ———————— ஆவர்.

(A) நாராயணன்
(B) முருகன்
(C) சிவன்
(D) விநாயகர்

191. விசிஷ்டாத்துவைத மதத்தை பரப்பியவர்

(A) மத்துவாசாரியர்
(B) இராமானுஜர்
(C) சங்கரர்
(D) ஜைமினி

192. நம்மாழ்வாரை தெய்வமாக வணங்கிய ஆழ்வார் யார்?

(A) தொண்டரடிப் பொடியாழ்வார்
(B) திருமங்கையாழ்வார்
(C) மதுரகவியாழ்வார்
(D) திருப்பாணாழ்வார்



Teachingninja.in

193. கீழ்க்கண்ட இணைகளில் எது பொருத்தமற்றது?

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (A) | பெருமாள் திருமொழி | – | குலசேகர ஆழ்வார் |
| (B) | திருப்பாவை | – | ஆண்டாள் |
| (C) | பெரிய திருமடல் | – | பெரியாழ்வார் |
| (D) | மூன்றாம் திருவந்தாதி | – | பேயாழ்வார் |

194. தாம் கண்ட காட்சியில் சிவனும் திருமாலும் இணைந்திருக்கும் திருக்கோலத்தைக் கண்டதாகக் கூறிய ஆழ்வார்

(A) பேயாழ்வார்
(B) பெரியாழ்வார்
(C) நம்மாழ்வார்
(D) திருமங்கையாழ்வார்

195. விட்டுணுசித்தர் என்ற இயற்பெயருடைய ஆழ்வார்

(A) குலசேகர ஆழ்வார்
(B) பெரியாழ்வார்
(C) திருப்பாணாழ்வார்
(D) தொண்டரடிப் பொடியாழ்வார்

196. ஆண்டாள் காலம்

(A) கி.பி. 775
(B) கி.பி. 885
(C) கி.பி. 665
(D) கி.பி. 555

197. திருவாய்மொழிப் பாடல்களின் எண்ணிக்கை

(A) 1100
(B) 1000
(C) 2000
(D) 3000

198. “பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்”
எனப் பாடிய ஆழ்வார் யார்?

(A) தொண்டரடிப் பொடியாழ்வார்
(B) திருப்பாணாழ்வார்
(C) குலசேகர ஆழ்வார்
(D) திருமங்கையாழ்வார்

199. “அம்புலிப் பருவத்தில் சாம, பேத, தான, தண்டம் எல்லாம் பாடி அழைக்கும் மரபை” தொடங்கி வைத்தவர்

(A) பூதத்தாழ்வார்
(B) ஆண்டாள்
(C) பெரியாழ்வார்
(D) நம்மாழ்வார்

200. நாதம் என்ற சுத்த மாயையின் அதிபர்

(A) முருகன்
(B) பிரமன்
(C) சிவம்
(D) விஷ்ணு



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK

SEAL

Teachingninja.in



Teachingninja.in